**O.S.No. 35/2018**

**Date:17.11.2025**

**வ.சா 1. கருப்பசாமி**

2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் நான் சொல்லியுள்ள கருப்பையா, சொக்கலிங்கம் எனது பூட்டனார் என்றால் சரிதான். மேற்படி கருப்பையாவின் மகன் தான் எனது தந்தை ஆதினமிழகி. மேற்படி ஆதினமிழகியின் வாரிசுதாரர்கள் தான் நானும், 2ம் வாதி அய்யனாரும் என்றால் சரிதான். மேற்படி சொக்கலிங்கத்தின் வாரிசு யார் என்றால் அவருக்கு திருமணம் ஆகவில்லை. மேற்படி சொக்கலிங்கத்திற்கு திருமணம் ஆகவில்லை என்று எனது பிராதில் சொல்லிக்கொள்ளவில்லை. மேற்படி சொக்கலிங்கம் என்பவருக்கு திருமணம் ஆகி மனைவி மக்கள் இருக்கிறார்கள் அதனை மறைத்து இந்த வழக்கிற்காக இல்லை என்று பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இந்த வழக்கில் எங்கள் இடம் வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்தேன். பிராது தபசில் சொத்தில் புஞ்சை சர்வேஎண்.374/1ஏ என்று தான் காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். அந்த சர்வே எண்.,374/1ஏ–க்கு தான் பரிகாரம் கேட்கிறேன். அந்த சர்வே எண் 1982 நிலஉடைமை மேம்பாட்டு திட்டத்தில் உட்பிரிவு செய்யப்பட்டு 374/1ஏ1, 374/1ஏ2, 374/1ஏ3 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் உட்பிரிவு செய்யப்பட்ட விபரத்தை நான் சொல்லவில்லை என்றால் குறிப்பிடப்படவில்லை. மேற்படி புஞ்சை சர்வே 374/1ஏ – 3 ஏக்கர் 75 செண்ட். அது தான் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் புலப்படங்கள் சர்வே எண்.374/1ஏ1, 374/1ஏ2 மற்றும் 374/1ஏ3 உரியது என்றால் சரிதான். **சர்வே எண்.374/1ஏ1க்கு உரிய புலவரைபடம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சர்வே எண்.374/1ஏ2க்கு உரிய புலவரைபடம் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சர்வே எண்.374/1ஏ3க்கு உரிய புலவரைபடம் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எனது பிராது தபசில் சொத்திற்கு தென்புறம் ரோடு இருப்பதாக தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

எனது பிராது தபசில் சொத்திற்கு வடபுறம் இருந்து வரும் 1 ஏக்கர் நிலத்திற்கு தெற்கு என்று தான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். பிராது தபசில் சொத்திற்கு மேல்புறம் சர்வே எண்.381 இருப்பதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். தபசில் சொத்திற்கு கீழ்புறம் புஞ்சை சர்வே எண்.373 உள்ளது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் பிராதில் சொல்லியுள்ள மால்கள்படி தபசில் சொத்துக்கள் இருந்து வரவில்லை. இந்த பிராதில் சொல்லியுள்ள மால்களும் தவறானது. இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ள மால்கள் என்றால் சரியல்ல. எனது பிராதில் 4 வது பாராவில் சொல்லியுள்ள சோலையழகு பெயரில் பிராது தபசில் சொத்திற்கு வடபுறம் கூறியுள்ள இடத்திற்கு மேற்படியாரின் பெயரில் எவ்விதமான பட்டாவோ வேறு எந்த ஆவணமோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி சோலையழகர் யார் என்று எனக்கு தெரியாது. அதனால் அவர்களின் வாரிசுகள் யார் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கில் சொல்லக்கூடிய சோலையழகர் என்பவர் அனுபவித்து வருவதாக சொல்வது பொய் அப்படி அனுபவம் செய்து வந்தால் அவர்களின் வாரிசுகளை கட்சியாக சேர்த்திருப்பீர்கள் என்றால் சரியல்ல. எனது பிராதில் சொல்லியுள்ள சார்வே எண்.374/1ஏ – 4 ஏக்கர் 7 செண்ட் இருந்ததாக கூறியுள்ளேன் என்பதற்கு பட்டாவோ வேறு எந்த ஆவணமோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புஞ்சை எண்.374/1 ஏல் தென்பக்கம் 2 ஏக்கர் 75 செண்ட் நிலம் லட்சுமணன் குமாரர்கள் கருப்பையா, சொக்கலிங்கம் ஆகியோருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்று பிராதில் கூறியுள்ளேன். மேற்படியார்களுக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு பட்டாவோ மற்றும் வேறு ஆவணங்களோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உண்மையில் மேற்படியாருக்கு பாத்தியப்பட்டிருந்தால் ஆவணங்கள் தாக்கல் செய்திருப்பேன் அவர்களுக்கு பாத்தியமில்லை என்பதால் தான் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் இருளன் புஞ்சைக்கும் வடக்கு, இரணன் புஞ்சைக்கும் மேற்கே, சுப்பிரமணியன் பிள்ளை புஞ்சைக்கும் தெற்கே, மீனாட்சி புஞ்சைக்கும் கிழக்கே என்று மால்கள் போட்ப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

என்னுடைய முன்னோர்களான கருப்பையா, சொக்கலிங்கம், லட்சுமணன் ஆகியோர்கள் பெயரில் மேற்படி ஆவணத்தில் மால்களாக காட்டப்படவில்லை என்றால் சரிதான். வா.சா,ஆ.1 ஆவணத்தின் படி சொத்திற்கு தென்புறம் நாங்களோ, எங்கள் முன்னோர்களோ அனுபவித்திருந்தால் குறிப்பிடப்பட்டிருப்பார்கள் அனுபவம் செய்து வராததால் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. சொக்கலிங்கத்தின் பெயரில் தாவா சொத்திற்கு எந்த வித பட்டாவும் தாக்கல் செய்யவில்லை. எனது தகப்பனாரின் தந்தை கருப்பையா பெயரிலும் தாவா சொத்திற்கு எந்த வித பட்டாவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2,3 ஆவணங்களில் 1 ஏக்கர் 37 செண்ட் பாக விடுதலை ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் தன் பாக சொத்தை என்னிடம் இருந்து விடுதலை கொடுக்கும்படி கேட்டுக்கொண்டதின் படி எழுதி கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் இரணன் நிலத்திற்கும் மேற்கு என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தந்தையார் பெயருக்கு வந்தற்கு பட்டா ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2,3 ஆவணத்தின் பிராதில் கூறியபடி மேல்பாதி சொத்தான 1 ஏக்கர் 37 செண்ட் நிலம் சொக்கலிங்கம் பெயரில் பட்டாக்களோ வேறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி சொக்கலிங்கம் எப்போது இறந்தார், அவருக்கு வாரிசுகள் இல்லை என்றும் பிராதில் ஏதும் கூறவில்லை. எனது தந்தை வாரிசு அடிப்படையில் அனுபவித்தார் என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பத்திரமும் தீர்வை ரசீதும் தாக்கல் செய்துள்ளேன். இந்த பிராதில் சொல்லக்கூடிய 2 ஏக்கர் 75 செண்ட் ஆதினமிழகி–க்கு பாத்தியப்பட்டது என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. எந்த காலத்திலும் 2 ஏக்கர் 75 செண்ட் நிலத்தினை ஆதினமிழகியோ அல்லது அதற்கு பின் நாங்களோ அனுபவம் செய்து வரவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் மனுவானது என்னால் மாவட்ட வருவாய் அலுவலகத்தில் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். **மாவட்ட வருவாய் அலுவலரிடம் வாதிகளால் கொடுக்கப்பட்ட மனு வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மேற்படி மனுவில் பட்டா எண்.870ல் சர்வே எண்.374/1ஏ1 விஸ்தீரணம் 0.76.0 ஏர் பரப்பை கருப்பன் மகன் இரத்தினம் என்பவருக்கு தவறுறாக பட்டா ஏற்பட்டுவிட்டது அதை இரத்து செய்ய கொடுக்கப்பட்டது. அந்த மனுவின் அடிப்படையில் தான் பட்டா எண்.870ல் உள்ள சர்வே எண்.374/1ஏ1ஐ தனியாக எடுத்து பட்டா எண்.2455 கூட்டுபட்டவாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் தான் கருப்பன் மகன் இரத்தினம், கருப்பையா மகன் ஆதினமிழகி என்று கூட்டுப்பட்டாவாக வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மனுவில்எங்களுக்கு சர்வே எண்.374/1ஏ1ல் 1 ஏக்கர் 37 செண்ட் நிலம் பாத்தியப்பட்டதாக மனு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். கோட்டாட்சி தலைவர் வழங்கிய உத்தரவில் பட்டா எண்.870ல் புல எண்.374/1ஏ1 ஐ இரத்து செய்து கருப்பையா மகன் ஆதினமிழகி என்பவரும் கூட்டாக பட்டா வழங்குவதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த உத்தரவில் ரீசெட்டில்மெண்ட் ஆவணம் இணைக்கப்பட்டதாக தான் கூறப்பட்டுள்ளது. ஆனால் பிராதுடன் தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் அந்த ரீசெட்டில்மெண்ட் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த ரீசெட்டில்மெண்ட் ஆவணத்தை நான் தாக்கல் செய்திருந்தால் எனக்கு எவ்வளவு இடம் பாத்தியப்பட்டது என்று தெரிந்து விடும் என்பதால் அதனை மறைத்து இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வருவாய்அலுவலகத்தில் இதுவரை சர்வே எண்.374/1ஏ2, 374/1ஏ3 என உட்பிரிவு செய்யப்பட்தை ரத்து செய்ய வேண்டும் என்று எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உண்மையில் அந்த இடம் எங்களுக்கு பாத்தியப்பட்டிருந்தால் மனு கொடுத்திருப்போம் பாத்தியமில்லை என்பதால் மனு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் பரிகாரத்தில் சர்வே எண்.374/1ஏ2, 374/1ஏ3 உட்பிரிவு செய்யப்பட்டதை இரத்து செய்யவேண்டும் என்று கோரப்படவில்லை என்றால் சரிதான்.

எங்களுக்கு தனிப்பட்டா வழங்கி புலப்படம் மற்றும் வருவாய் கணக்குகளில் உரிய திருத்தம் செய்து கொள்ள வேண்டி வலியுறுத்து கட்டளை பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.374/1ஏ2, 374/1ஏ3 உட்பிரிவு செய்யப்பட்டதை வருவாய் அலுவகங்களில் எவ்வித மனுக்கள் செய்யாமல் நீதிமன்றத்தில் வந்த அதனை அந்த உட்பிரிவை இரத்து செய்ய கேட்கப்பட்டுள்ளது சட்டப்படி செல்லக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. வா.சாஆ.8 ஆவணத்தில் இருளன் மகன் வெள்ளையப்பன் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அது தவறாக வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பட்டாவை இரத்து செய்ய நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சாஆ.7 ஆவணத்தில் இரணன் மகன் பாலு பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அது தவறாக வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பட்டாவை இரத்து செய்ய நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் மேற்படி பட்டாவை இரத்து செய்ய நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றாலும் அவ்வாறு எடுக்காததால் தான் அது சம்மந்தமாக ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண். 374/1ஏ2, 374/1ஏ3 ஆகிய இடங்களில் 2,4,5 பிரதிவாதிகள் எலும்பிச்சை தோட்டம், மாட்டு தொழுவம் வைத்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. மற்ற இடங்களில் பயிர் வகைகள் வைத்து விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. சர்வே எண். 374/1ஏ2, 374/1ஏ3 நானோ எனது முன்பாத்தியஸ்தர்களோ அனுபவம் செய்து வரவில்லை என்றால் சரியல்ல. இரணன் மக்கள் வெள்ளைப்பன், பாலு, வெள்ளையம்மாள், பேச்சியம்மாள் என்று சொன்னால் வெள்ளையப்பன், பாலு இரணன் மகன் என்று தெரியாது. வெள்ளையப்பன் மகன்கள் யார் யார் என்றால் பெரிய இருளப்பன், சின்ன இருளப்பன், வீரன், சோலை, ஆறுமுகம், சங்கு, ஆவுடைத்தங்கம் ஆகியோர்கள் ஆவார்கள்.பாலு மகன் அய்யனார்.

வீரன் இறந்து விட்டார். வீரன் மனைவி அழகர் மக்கள் தான் பேச்சியம்மாள், கருப்பசாமி, பாலமுருகன், பால்துரை. சங்கு என்பவரின் மக்கள் தெய்வானை, ராணி, ராஜா, செல்வம் தெரியாது. சங்கு என்பவர் இறந்துவிட்டார். சர்வே எண்.374/1ஏ2, 374/1ஏ3 1 ஏக்கர் 86 செண்ட் இரணன் என்பவருக்கு பாத்தியப்பட்டது. அவரது இறப்புக்கு பின்பு அவர் மக்கன் வெள்ளையப்பன், பாலு ஆகியோருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. பாலு வெள்ளையப்பன், 40 ஆண்டுகளுக்கு முன்பே வாய்மொழி குடும்ப ஏற்பாட்டின்படி 1 ஏக்கர் 86 செண்ட்ல் மேல் புறம் 1 ஏக்கர் 12 செண்ட் வெள்ளயப்பன் பாகத்திற்கும், அதற்கு கீழ் புறம் 74 செண்ட் பாலு பாகத்திற்கு ஒதுக்கப்பட்டு மேற்படியார்கள் அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் மேற்படியார்களுக்கு பட்டா ஏற்பட்டு தீர்வை முதலானவை செலுத்தி அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. பாலு என்பவர் எப்போது இறந்தார் என்று தெரியாது. அவரது மகன் தான் அய்யனார் 6ம் பிரதிவாதி அவரும் இறந்து விட்டார். பாலு இறந்த பின்பு அய்யனார் என்பவருக்கு கிடைக்கப்பட்டு சர்வே எண்.374/1ஏ3 அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. வெள்ளையப்பன் எப்போது இறந்தார் என்று தெரியாது. மேற்படி வெள்ளையப்பன் வாரிசுகளை இந்த வழக்கில் கட்சியாக சேர்க்காததால் இந்த வழக்கும் அவசிய கட்சிகளை சேர்க்காத தோசத்திற்கு உள்ளாகியுள்ளது. இந்த ஒரே காரணத்திற்காக வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. இரத்தினம் என்பவருக்கு எந்த பகுதியில் இடம் உள்ளது என்று நான் பிராதில் கூறவில்லை என்றால் சரிதான். மேற்படி சொத்தை நான் அனுபவம் செய்து வந்திருந்தால் இரத்தினத்திற்கு எந்த பகுதி என்று சொல்லியிருப்பேன் என்றாலும் அனுபவம் செய்யாததினால் எந்த பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று கூறவில்லை என்றால் சரியல்ல.

நான் அனுபவத்தில் இல்லாததால் தான் என்னால் நான்கு மால்களின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. பிராது பிளானின் படி பூமியில் பிராது சொத்து இல்லை என்றால் சரியல்ல. நானோ எனது குடும்பத்தினரோ தாவா சொத்தினை தற்போது வரை அனுபவத்து வரவில்லை என்றால் சரியல்ல. 2,4,5,6 பிரதிவாதிகள் மற்றும் வெள்ளையப்பனின் வாரிசுகள் தான் சர்வே எண்.374/1ஏ2, 374/1ஏ3 இடங்களை தற்போது வரை அனுபவித்து வருகிறார்கள் என்றாலும், அதனால் வழக்கில் சுவாதீன பரிகாரம் கோராதால் வழக்கு நிலைக்கதக்கது அல்ல என்றாலும் சரியல்ல. பிராதுப்படி நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கதக்கது அல்ல என்றாலும், வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

7,8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

பிராதுடன் தாக்கல் செய்துள்ள வாதி தரப்பு சான்றாவணங்கள் 10,11 ஆவணங்கள் மீது நில நிர்வாக துணை ஆணையரிடம் மேல்முறையீடு செய்து கொள்ளவில்லை என்றால் சரிதான். 7,8 பிரதிவாதிகள் நில உடமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் அனுபவத்தின் அடிப்படையில் ஆவணங்களின் நான்கு மால்களின் படியும் உட்பிரிவு செய்துள்ளனர் என்றால் சரியல்ல. 7,8 பிரதிவாதிகள் இந்த வழக்கிற்கு அவசிய தரப்பினர் கிடையாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 10,11 ஆவணங்கள் சட்டப்படியும், வருவாய் துறை ஆவணங்களின் படியும் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**